# பாட்டுக்கு ஒரு புலவன்

பாரத நாட்டை வெள்ளையர்களிடமிருந்து விடுவிக்க விடுதலைப் போராட்டக் காலத்தில் தோன்றிய நாட்டுப்பற்று மிக்கவர்களுள் ஒருவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

எட்டையபுரம் என்ற சிறிய ஊரில், பாரதியார் 1882 -ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 11-ஆம் நாளன்று சின்னச்சாமி அய்யர் - லட்சுமி அம்மாள் என்ற இருவருக்கும் மகனாகப் பிறந்தார். இளம் பிராயத்திலிருந்தே பாராதியாருக்கு மொழியின்பால் ஒரு தனியார்வம் இருந்தது. ஐந்து வயதிலேயே தன்னுடைய தாயை இழந்த பாரதியாரின் மொழி ஆர்வம் சிற்றன்னையின் அன்பாலும் ஆதரவாலும் மேலும் வளர்ந்தது. இளைமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றுத் திகழ்ந்தார். அதனால், பாரதியார் 1893-ஆம் ஆண்டில் தனது பதினோராம் வயதிலேயே எட்டையபுர மன்னரால் சமஸ்தானப் புலவர்கள் முன்னிலையில் ‘பாரதி’ என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார். அதன்பின் இந்துக் கல்லூரியில் ஐந்தாம் படிவம் வரை கற்றார்.

1897-ஆம் ஆண்டு தனது பதினைந்தாம் வயதில் செல்லம்மாள் என்பவரை மணந்தார். இதற்குப் பிறகு சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளைக் கற்ற போதிலும் அவரின் தமிழ் மொழிப்பற்றுச் சிறிதும் குறையவில்லை. தாம் அறிந்த மொழிகளுள் தமிழே இனிமையுடையது என்பதை ‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிப் போல் இனிதாவதெங்கும் காணோம்’ என்று உணர்ந்து பாடினார். ‘‘செந்தமிழ் நாடென்னும் போதினிலே, இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே,’’ என்ற பாடலின் வாயிலாகப் பாரதியார் நாட்டுப்பற்றை மக்களுக்கு ஊட்டுகிறார்.

1897-ஆம் ஆண்டிற்குப் பிறகு அவரின் கவிதைகள் வெளியிடப்பட்டன. அவரின் முதல் பாட்டு ‘தனிமை இரக்கம்’, மதுரை ‘விவேகபானு’ என்ற பத்திரிகையில் வெளிவந்தது. பிறகு, 1908-ஆம் ஆண்டில் அவரின் பாடல்கள் ‘சுதேச கீதங்கள்’ என்ற தலைப்பில் நூல் வடிவில் வெளிவந்தன. அதைத் தொடர்ந்து, அவர் ‘இந்தியா’ பத்திரிகையை நடத்தி வந்தார்.

மக்களுக்குச் சுதந்திரம் அவர்களது பிறப்புரிமை என்ற எண்ணம் கொண்டவர் பாரதியார். ஆங்கிலேயர் காலடிகளில் இந்தியர் விழுந்துகிடப்பதை அடியோடு வெறுத்தார். எனவே, அவரின் கவிதைகள் பாரத நாட்டையும் அதன் சுதந்திரத்தையும் அடிப்படையாக வைத்து இயற்றப்பட்டவையாக இருந்தன. பாரதியின் இப்பாடல்கள் மக்களின் விடுதலை உணர்ச்சியைத் தூண்டிவிட்டன.

**“வந்தே மாதரம் என்போம் எங்கள்**
**மாநிலத் தாயை வணங்குதும் என்போம்”**

என்பன போன்ற பல கவிதைகள் பாரத நாட்டின் மணத்தைப் பாரெங்கும் கமழச் செய்தன. அவர் பாடல்களின் எளிமையும் சுவையும் மக்களின் உள்ளங்களை வெகுவாகக் கவர்ந்தன.

மேலும், பெண்களின் சுதந்திரத்திற்காகவும் அரும்பாடுபட்டார் பாரதியார். பெண்கள், ஆண்களுக்குச் சரிநிகர் சமம் எனக் கூறிக் கவிதைகள் பல இயற்றினார். பெண் குலத்தின் பெருமையும் பெண்ணின் சிறப்பையும் ''புதுமைப் பெண்'' என்ற கவிதை வழி வலியுறுத்தியுள்ளார்.

நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் கொண்ட பாரதியார் தெய்வப்பற்றும் மிக்கவர். அதன் தொடர்பாக அவர் இயற்றியுள்ள கவிதைகள் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களையும் தம்பால் ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன. விநாயகர், சண்கன், காளி, கண்ணன் உட்படப் பல தெய்வங்களைப் போற்றிச் சுமார் எழுபத்தேழு கவிதைகளைப் படைத்துள்ளார்.

**"காணி நிலம் வேண்டும் - பராசக்தி**
**காணிநிலம் வேண்டும்"**
**"காக்கைச் சிறகினிலே நந்த லாலா! - நின்றன்**
**கரிய நிறம் தோன்றுதையே நந்த லாலா!"**
**"காற்று வெளியிடைக் கண்ணம்மா - நின்றன்**
**காதலைப் யெண்ணிக் களிக்கின்றேன்"**

என்பன போன்ற பாடல்கள் கருத்தோடு, மொழியும் இணைந்து சுவையை ஊட்டி மக்களின் உள்ளங்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன. மேலும், இயற்கை, சமூகம், நீதி போன்ற பொதுவான தலைப்புகளை மையமாக வைத்துக் கவிதைகள் பல இயற்றியுள்ளார் பாரதியார்.

பாரதியார் மூன்று பெரும் பாடல்களையும் எழுதியுள்ளார். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியவையே அம்மூன்றும் ஆகும். கண்ணனைப் பல்வேறு கோணங்களில் வடிவமைத்து தேனினும் இனிய பாடல்களை இயற்றியுள்ளார். குயில் பாட்டு, தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிய உருவகக் கவிதையாகத் திகழ்கிறது. பாரதக் கதையின் ஒரு பகுதியைப் பாஞ்சாலி சபதம் கூறுகிறது. இவை மக்களிடையே மிகவும் புகழ் பெற்று விளங்குகின்றன.

பாரதியார் பெரியவர்களிடையே மட்டும் புகழ் பெற்று விளங்கவில்லை. பிஞ்சுக் குழந்தைகள் மனத்திலும் நீங்காத இடம் பெற்றுத் திகழ்கிறார். இதற்கு அவர் இயற்றிய ''பாப்பா பாட்டே'' காரணம் ஆகும். இவ்வாறு எல்லோரும் பயனடையும் வண்ணம் கவிதைகள் பல இயற்றிப் புகழ் அடைந்து சுடர்விட்டு எரிந்துகொண்டிருந்த ''பாரதி'' என்ற விளக்கு, 1921 - ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 11- ஆம் நாளன்று, 39 - ஆம் அகவையில் அணைந்தது.

நாட்டுப்பற்றையும், தமிழ்மொழிப்பற்றையும், தெய்வப்பற்றையும் தன்னுட்கொண்டு, தமது தாய் மொழியாகிய தமிழின்வழி கருத்துக் களஞ்சியத்தை உலகுக்குப் படைத்த பாரதியின் புகழ் தமிழ் உள்ளங்களில் இன்றும் மேலோங்கி நிற்கிறது.

**சி.மின்னொளி**
**புகுமுக வகுப்பு 1(1983)**
**ஆங் மோ கியோ உயர்நிலைப்பள்ளி**